**2018.12.09**

# ஊடக வெளியீடு

## இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் முன்னேற்றம் 2017, 2018

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவானது முன்னேற்றகரமான யுகத்தை கடந்து வருகின்றது. அதில் பிரதானமாக வழக்காடுதல் மற்றும் விசாரணைகள் சிறப்புற்றிருப்பதாகும். ஆணைக்குழுவின் வரலாற்றில் முதன்முறையாக சிறப்பு விசாரணைப்பிரிவு மற்றும் தடுப்பு நிவாரண அலுவலர்களின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் கடந்த 25 ஆண்டுகளுக்கு பின்னர், சட்டங்களை திருத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. அத்துடன் இந்த ஆண்டில் தேசிய செயற்பாட்டுத்திட்டத்தின் உருவாக்கம் சர்வதேச ரீதியிலான உறவுகளின் முன்னேற்றமும் மிக முக்கியமான பணிகளாக அமைந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவானாது சுதந்திரமானதும் சுயாதீனமானதுமான செயற்பாடு மற்றும் பாரபட்சமின்மை தொடர்பில் மிக உயர்ந்த மட்டத்தை உருவாக்க முடியும்.

மேற்படி கடந்த இரு ஆண்டுகளில் அடையப் பெற்ற முன்னேற்றம் தொடர்பில் இவ்வாறாக சுருக்கமாக முன்வைக்கலாம்.

01. நீதிமன்றத்தினூடான வெற்றிகர வழக்காடுதலின் ஊடாக 62 வழக்குகளில் பிரதிவாதிகள் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளனர். 2017 ஆம் ஆண்டில் இது 57 ஆகும். இதனை 2005 முதல் 2010 வரையிலான காலப்பகுதியுடன் ஒப்பிட்டு நோக்குதல் வேண்டும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், வருடமொன்றில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டோர்களின் எண்ணிக்கை 15 முதல் 20 வரையாகவே இருந்துள்ளது. ஆனால் சமகாலத்தில் அதிக வழக்குகளை தாக்கல் செய்தல் என்பதற்கு அப்பால் வழக்குகளில் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவோரின் எண்ணிக்கையை அதிகரிப்பதனை இலக்காகக் கொண்டு ஆணைக்குழுவின் சட்ட அலுவலர்கள் முறைப்பாடுகளின் முன்னெடுப்பினை சிறப்பாக மேற்கொண்டுள்ளனர்.

02. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கான பொதுவான குற்றச்சாட்டாக முன்வைக்கப்படுவது சாதாரண பதவிகளை வகிக்கும் நபர்களுக்கெதிராகவே வழக்குகளை தாக்கல் செய்தல் என்பதாகும். ஆனால் கடந்த இரு வருடங்களை அவதானிக்கும் போது இந்த குற்றச்சாட்டு பொய்ப்பிக்கப்பட்டுள்ளது எனலாம். முன்னாள் சட்ட மா அதிபர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி, முன்னாள் அமைச்சர்கள் மூன்று பேர், அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன தலைவர், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன பணிப்பாளர், லக்சல முகாமைத்துவ பணிப்பாளர், லக்சல செயற்றிட்டப் பணிப்பாளர், முன்னாள் மாவட்ட நீதிமன்ற நீதிபதி, மின்சார சபை பிரதானி, அவன்கார்ட் தலைவர், இராணுவ பிரிகேடியர்கள், முன்னாள் சுங்கப் பணிப்பாளர், உதவி சுங்கப் பணிப்பாளர், கடற்படை கண்காணிப்பாளர், முன்னாள் நகர முதல்வர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் முதலான உயர் பதவிகளை வகித்தவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முன்னால் அவன்கார்ட் தலைவர் மற்றும் முன்னாள் பிரிகேடியருக்கு எதிராக இலஞுசம் வாங்கியமை மற்றும் பெற்றுக் கொண்டமை முதலான குற்றங்களுக்கு ஒரே வழக்கில் குற்றச்சாட்டுக்கள் முன்வைத்து விஷேட வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

03. இவ் ஆண்டில், இலஞ்சம் பெறும் போதான வெற்றிகரமான சுற்றிவளைப்புக்களில் 47 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுள் அரச சேவையில் உயர்பதவிகளை வகித்த இருவர் மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர், அரசாங்க மரக்கூட்டுத்தாபன தலைவர், தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் தலைவர், சிரேஷ்ட மதிப்பீட்டாளர்கள், மின்சார சபை பிரதானி மற்றும் பொலிஸ் பரிசோதகர் முதலான பதவிகளை வகித்தோரும் உள்ளடங்குவர்.

04. ஆணைக்குழுவின் வரலாற்றில் கடந்த ஐந்து ஆண்டுகளாக விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது பொலிஸ் அலுவலர்களினாலாகும். வரலாற்றில் முதல் தடவையாக நிபுணத்துவ அலுவலர்களை பணிக்கமர்த்துவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இந்நிலையில் கணக்கியல், கணக்காய்வு, நிதி பகுப்பாய்வு, டிஜிட்டல் விசாரணைகள், பிணைமுறி

பாதுகாப்பு, வங்கி, சர்வதேச சமவாயங்கள், பெறுகைகள், கட்டுமானம், பொறியியல், முகாமைத்துவம், அரச நிர்வாகம் மற்றும் பல்வேறு துறைகளுக்கும் என விஷேட நிபுணத்துவமிக்க 200 பணியாளர்களை உள்ளீர்ப்பதற்கான அனுமதியினை அரசு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. சுமார் 8000 இற்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன் நுண்மதி மற்றும் மொழி ஆற்றலைப் பரீட்சிப்பதற்கான போட்டிப்பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்பட்டுள்ளது.

05. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவானது வழக்கிடுதல் மற்றும் விசாரணை நடவடிக்கைகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து வந்த நிலையில் உலகின் ஏராளமான நாடுகளின் அனுபவங்களின் படி தடுப்பு நிவாரண பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையில் தடுப்பு நிவாரண அதிகாரிகள் 50 பேரினை ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் ஊழல் தடுப்பு நிவாரண பிரிவொன்றினை அமைப்பதற்கான அரசாங்கத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. சுமார் 5000 இற்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் ஆட்சேர்ப்பிற்கான நேர்முகத்தேர்வுகள் தற்போது நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

06. ஆணைக்குழுவின் வரலாற்றில் கடந்த 25 ஆண்டுகளில் தற்போதுள்ள சட்டங்களில் எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பின்னர் சட்டங்களை திருத்துவதற்கான பிரேரணை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டது. அதில் மிகவும் அத்தியவசியமான திருத்தமொன்று இலஞ்ச (திருத்தச் சட்டம்) மேற்கொள்ளப்பட்டமையின் மூலம் இதுவரைக்காலமும் நீதிவான் நிதிமன்றத்தில் மாத்திரம் வழக்கிடப்பட முடியுமாக இருந்த ஊழல் குற்றம் தொடர்பில் மேல் நீதிமன்றில் வழக்கு தொடுக்கும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதற்கு அப்பால் மேலும் பலவிடயங்களும் திருத்தத்திற்குற்படுத்தப்படவுள்ளதுடன், தனியார் துறை இலஞ்சம், பாலியல் இலஞ்சம், விளையாட்டுக்களுடன் தொடர்பான இலஞ்சம், வெளிநாட்டு அரச அலுவலர்கள் தொடர்பான இலஞ்சம் உள்ளிட்ட இலஞ்ச சட்டம் தொடர்பான பல விடயங்களை உள்ளடக்கிய வரைவுகள் சட்டவரைஞருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்களினால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

07. ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டத்தினை திருத்தும் வகையிலான சட்ட வரைவு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பாராளுமன்றத்தில் இந்த விவாதம் ஆரம்பிக்கப்பட்டு வேறொரு தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டது. இந்த திருத்தத்தின் விளைவாக, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சான்றுகளை ஆய்வு செய்து அதன்படி இலஞ்ச ஆணைக்குழுவினால் வழக்கிடுவதற்கான அதிகாரத்தினை பெற்றுக் கொள்வதாகும். அதன்படி, மீண்டும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவானது சாட்சியாளர்களின் சான்றுகளை பெறுவது அவசியமில்லை. ஜனாதிபதி ஆணைக்குழுவின் சான்றுகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்.

08. எமது சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் வெளிநாட்டு நிபுணர்களுடன் பல்சுற்று கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. உலகளாவிய சொத்துரிமை சட்டத்துடன் எமது சட்டத்தையும் புதுப்பிப்பதற்கான ஆலோசனைகளை அவர்கள் வழங்கியதுடன் அது தொடர்பில் துறைசார் நிபுணர்கள் மற்றும் சட்ட வரைஞர்களின் உதவியுடன் வரைவொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவை சட்டவரைஞருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

09. இலங்கையில் இலஞ்ச ஊழலை ஒழிக்க முடியாத நிலைமைக்கான பிரதான காரணம் சரியான செயல் திட்டம் எதுவும் காணப்படாமையாகும். ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் உறுப்பினர் என்ற வகையில் கட்டாயமாக ஊழலுக்கு எதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை கொண்டிருக்க வேண்டும். அவ்வகையில் அதற்கான பொறுப்பு அமைச்சரவை அனுமதியுடன் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டதுடன் நாடளாவிய ரீதியில் சுமார் 30 கலந்துரையாடல்கள் நடைபெற்றன. அவற்றுள் நான்கு இலங்கைப் பாராளுமன்றத்தில் நடைபெற்றதுடன் மக்கள் பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களை தெரிவிப்பதற்கான வாய்ப்பளிக்கப்பட்டது. அரச துறை அதிகாரிகள், தொழில் வல்லுனர்கள், சிவில் சமுதாய அமைப்புக்கள், கலைஞர்கள் சகல துறைசார் அலுவர்களினதும் கருத்துக்களைப் பெற்று அடுத்த

ஐந்து ஆண்டுகளுக்கான தேசிய செயற்பாட்டுத்திட்டம் ஏற்கனவே வரைவாக தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த தேசிய செயற்பாட்டுத்திட்டமானது நிவாரணம், மனப்பாங்கு மாற்றம், புலானய்வு, சட்டங்களை அறிமுகம் செய்தல் முதலான துறைகளை உள்ளடக்கியுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்காக தயாரிக்கப்பட்ட இச் செயற்பாட்டுத்திட்டத்துடன் 04 ஆவணங்கள் வரைவாக வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

i. அன்பளிப்பு விதிகள்
ii. முரண்பாட்டு ஆர்வ விதிகள்
iii. அரச அலுவலர்களுக்கான நேர்மைக் கைந்நூல்.
iv. இலஞ்சம், சொத்துக்கள், பொறுப்புக்கள், ஆணைக்குழு, தேர்தல் பிரசார நிதி, குரலெழுப்புவோர் தொடர்பான சட்ட வரைவு முன்மொழிவு.

அதன்படி, தேசிய செயற்பாட்டு திட்டத்தையும், மேலே உள்ள நான்கு கையேடுகளையும் வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தேசிய செயற்பாட்டுத் திட்டம் மற்றும் 4 கையேடுகளும் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அதன்படி, 5 புத்தகங்கள் வெளியிடப்பட உள்ளன.

10. கடந்த ஆண்டு, இலஞ்ச ஆணைக்குழுவிற்கான சர்வதேச ஒத்துழைப்பும் அவதானமும் பெரிதும் நிலவியமை குறிப்பிடத்தக்கது. அதன்படி, GSP + வரிச்சலுகையை பெற்றுக் கொள்வதில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வெளிவிவகார அமைச்சுக்கு செயலூக்கமான பங்களிப்பை வழங்கியதுடன் ஐரோப்பிய யூனியனில் வெற்றிகரமான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு ஆணைக்குழுவிற்கு கிட்டியது. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் நிபுணத்துவத்தை மேம்படுத்த தொழில்நுட்ப உதவியை வழங்க ஐ.நா. எப்போதும் முன்னோக்கி வந்துள்ளது. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் முன்னேற்றத்தை அங்கீகரித்ததன் மூலம் ஐக்கிய நாடுகளின் சிறப்பு வல்லுநர்களின் குழு இந்த ஆண்டு ஜுலையில் கொழும்பில் 35 வெளிநாட்டு நிபுணர்களின் பங்குபற்றுதலுடன் ஒன்று கூடியது. அங்கு ஊழலுக்கு எதிராக செயற்படும் நிறுவனங்களை சுயாதீனமானதாகவும், பலமிக்கதாகவும் மாற்றும் நோக்கில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட 2012 இந்துனேசியாவின் ஜகார்த்தா பிரகடனம் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டதுடன் ‘‘ஊழலுக்கு எதிரான நிறுவனங்களின் கொள்கைகள் தொடர்பான ஜகார்த்தா பிரகடனம் தொடர்பான அறிவுசார் கலந்துரையாடலை விருத்தி செய்தல்’’ எனும் தொனிப்பொருளுடனான குறித்த மாநாட்டின் நிறைவில் கொழும்பு கருத்துரை வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

11. விசாரணை அலுவலர்கள் மற்றும் சட்ட அலுவலர்களை மலேசியா, ஹாங்காங், பூட்டான், கொரியா, ஜப்பான் மற்றும் சீனா முதலான நாடுகளுக்கு அனுப்பி பயிற்றுவிக்கும் வாய்ப்பு ஆணைக்குழுவிற்கு கிட்டியது. அடுத்த வருடத்தில் ஹொங்கொங் தேசத்தின் ஊழல் எதிர்ப்பு ஆணையம் எமது ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்கும் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது. ஊழலுக்கு எதிரான பயணத்தில் வெற்றி பெற்ற நாடுகளின் நடவடிக்கைகளை செயற்திட்டங்களை அறியும் வாய்ப்பு பயிற்சிகளை பெறும் வாய்ப்பினை இலங்கையின் உயர் நிலை அதிகாரிகளுக்கு வழங்கும் வாய்ப்பு ஆணைக்குழுவிற்கு கிட்டியது. அதன்படி, சட்டமா அதிபர், ஜனாதிபதியின் செயலாளர், பொது நிர்வாக அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் செயலாளர் மற்றும் சட்ட வரைஞர் ஆகியோர் பூட்டான் மற்றும் ஹொங்கொங்கில் அனுபவத்தை பெற முடிந்தது. மலேசியாவின் நேர்மை நிலைய தலைவரை இலங்கைக்கு அழைப்பு விடுத்ததோடு, அவரின் நெறிப்படுத்தலுடனான கலந்துரையாடலில் இலங்கையின அரசாங்க, சிவில்சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கபற்றியமை குறிப்பிடத்தக்கது.

12. கடந்த ஆண்டில் பாடசாலை மாணவர்களையும், இளைஞர்களையும், அரசாங்க அதிகாரிகளையும் உள்ளடக்கியதான 54 விஷேட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தடுப்பு நிவாரணம் சட்ட அலுவலர்கள் அல்லது புலனாய்வு அலுவலர்களின் கடமைகளில் ஒரு பகுதியாக இல்லை என்றாலும், அவர்கள் இந்த பயிற்சி பட்டறைகளை வெற்றிகரமாக நிறைவு செய்வதில் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அடுத்த வருடத்தில் பாடசாலை மட்டத்திலும் உயர்கல்வி மட்டத்திலும்

பாரிய விழிப்புணர்வு திட்டத்தை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பிலான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

13. இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் மிகப்பெரிய சவால் இடப் பற்றாக்குறை ஆகும். குறிப்பாக இந்த நிலைமை தற்போதைய கட்டட இடிபாடு (பாவிப்பு தடை) காரணமாக தீவிரமானது. அரச பொறியியலாளர்கள் எச்சரிக்கை செய்து குறித்த கட்டடத்தில் இருந்து சுமார் 75 பேர் வெளியேறி கெப்படிபொல மாவத்தையில் உள்ள முன்னைய ஆட்ப்பதிவு அலுவலகத்தில் தமது பணிகளை முன்னெடுக்கின்றனர். எதிர்காலத்தில் தடுப்பு நிவாரண அலுவலர்கள் உள்ளீர்க்கப்படவுள்ளனர். புதிய கட்டடம் ஒன்றினை அமைக்கு வரைக்கும் கெப்படிபொல மாவத்தையில் உள்ள முன்னைய ஆட்ப்பதிவு அலுவலகத்தினை பயன்படுத்துவதற்கான அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

14. இலஞ்ச ஆணைக்குழு முகம் கொடுக்கும் மிகப் பெரிய சவால் இடப்பற்றாக்குறை ஆகும். தற்போதைய ஆணைக்குழு வளாகத்திற்கு அருகில் உள்ள இடத்தில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்புதல் பெற கடும் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. அதன் படி 1 ½ வருடதிற்கு பின்பு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியானது கட்டடத்தினை நிர்மாணிக்க வழங்கப்பட்டுள்ளது.

15. அரச துறைக்கான தடுப்பு நிவாரண செயற்றிட்ட முன்மொழிவானது வரைவாக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றுள்ளது. அவ்வகையில் அடுத்த ஆண்டிற்கு சுமார் 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டுக்கான அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அத்துடன் சட்ட அலுவலர்கள், விசாரணை அலுவலர்கள் மற்றும் தடுப்பு நிவாரண அலுவலர்களை அடுத்த வருடத்தில் பயிற்றுவப்பதற்கான நிதி ஒதுக்கீடாக ரூபா 200 மில்லியன்களுக்கான அமைச்சரவை அனுமதியும் இதுவரையில் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அடுத்த வருடத்தில் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் மூலம் மக்களை அறிவூட்டி வழிகாட்டுவதன் மூலம் மக்களின் மனப்பாங்கு மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கான பாரிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான நிதி உதவிகளுக்கு நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

16. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் குறைந்த சம்பளம் காரணமாக திறமையான மற்றும் நிபுணத்துவமிகு சட்டத்தரணிகளை உள்ளீர்ப்பதும், அவ்வாறனவர்களின் நீடித்த சேவையை பெற்றுக் கொள்வதும் சவால் மிகுந்த ஒன்றாகியுள்ளது. அண்மையில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சம்பள அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக அரசாங்க சட்டத்தரணிகளாக ஈடுபட எதிர்பார்க்கும் அளவு அதிகரித்துள்ளது. ஆனால் ஆணைக்குழுவின் அலுவலர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை புறந்தள்ளப்பட்டமை ஆணைக்குழுவிற்கு முன்னேற்றகரமான நகர்விற்கு பிரதான சவாலாகவுள்ளது.

17. தற்போது இலஞ்ச ஆணைக்குழுவில் 200 விசாரணை அலுவலர்களும் 29 சட்ட அலுவலர்களுமே பணிபுரிகினறனர். நாட்டின் மக்கள்தொகையுடன் ஒப்பிடுகையில் விகிதாசார அடிப்படையில் இது ஒரு அற்பதொகையினராகும். உதாரணமாக 6 மில்லியன் மக்கள் தொகையினைக் கொண்ட ஹொங்கொங்கில் ஊழல் விசாரணைப் பிரிவில் சுமார் 1,000 க்கும் அதிகமான புலனாய்வாளர்கள் உள்ளனர். அந்நாட்டின் தேசிய வரவு செலவுத்திட்டத்தில் 0.282% அளவு ஆணைக்குழுவிற்று ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையின் இலஞ்ச ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது 0.014% ஆகும்.

18. இலஞ்ச ஊழல் தொடர்பாக ஐந்து விசாரணைப் பிரிவுகள் மூலம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதில் ஒருபிரிவில் சுமார் 20 விசாரணை அதிகாரிகளே உள்ளனர். விசாரணைப்பிரிவொன்றில் விசாரணை மேற்கொள்வதற்கென சுமார் 700, 800 கோப்புக்கள் உள்ளன. மனித வளப்பற்றாக்குறை காரணமாக சில சந்தர்ப்பங்களில் விசாரணைகளில் தாமதங்கள் ஏற்படுகின்றன. 2017 இல் 2768 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதுடன் அதில் 1652 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டுள்ளன. 2018.11.30 ஆம் திகதியாகும் போது கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் 3081 ஆக காணப்பட்டதுடன் அதில் மேலதிக விசாரணைக்காக பரிந்துரைக்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 1863 ஆகும்.